Registered as a News Paper | பக்கங்கள் 4 | விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஆடி 02 | [17-07-1998] | சனிக்கிழமை | ஓசை 149

## லலித்தின் கொலைக்கு அரசு காரணமில்லையாம்

[கொழும்பு]

முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஏப்பிரல் மாதம் 24ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும் பிரேமதாச அரசாங்கத்திற்கும் தொடர்பு இருப்பதற்கான ஆதாரமில்லை எனவும், சந்தர்ப்ப சூழ்நிலை ஆதாரங்களை வைத்துப் பார்க்கும் போது இக்கொலைக்கும் விடுதலைப் (3ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பம்

## சுன்னாகத்தில் முதல் நீதிமன்றம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவட்ட நீதிமன்றங்கள் அடுத்த மாத நடுப்பகுதியில் இருந்து ஆரம்பிப்பதற்கான ஆயத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. இந் நீதிமன்றங்களில் முதல் நீதிமன்றம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறியவருகின்றது.

தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது. இதன் முதற்கட்டமாக அடுத்த மாதத்தின் நடுப்பகுதியில் முதல் மாவட்ட நீதிமன்றம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

முதல் நீதிமன்றம் ஆரம்பிக்கப்படுவதைத் தொடர்ந்து நல்லூர், பருத்தித்துறை, சாவகச்சேரிப் பகுதிகளிலும் நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

## கிளிநொச்சி, பூநகரி பகுதிகளில் 'புக்காரா' அகோரத் தாக்குதல்

### இளைஞர் பலி; 15 பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் இரு புக்காரா விமானங்கள் இணைந்து மக்கள் குடியிருப்புகள் மீது அகோரகுண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. கண்மூடித்தனமான இத் தாக்குதல்களால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பூநகரி ஆலங்கேணி பிரதேசத்தை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சுவிமானங்கள் அப்பகுதியில்குண்டுவீச்சுத் தாக்குதல்களைமேற்கொண்டபின் திரும்பிச் சென்றன.

தொடர்ந்து 1 45 மணியளவில் ...

இரு புக்காரா விமானங்களும் தொடர்ச்சியாக குண்டுவீச்சுகளை மேற்கொண்டன.

இத் தாக்குதல்களினால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மூதாட்டி உட்பட பதினொரு பேர் படுகாயமடைந்தனர். ...

(20) கரடிப்போக்கு, கதிர்வேலாயுதம் (55) பரந்தன், கிருஷ்ணா (41) பாரதிபுரம், சுந்தரம் (61) திருநகர், ரங்கசாமி (41) 3ஆம் வாய்க்கால், சிதம்பரநாதன் (18, கரடிப்போக்கு, இராமசாமி (50) ஐயப்பன் வீதி, கண்ணன் (20) ...

## சட்டத்தரணிகளுக்கான கலந்துரையாடல் இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த [வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி] சட்டத்தரணிகளையும், சட்ட அறிஞர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுவதற்காக நாளை காலை 10–00மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த அனைத்து சட்டத்தரணிகளையும், சட்டஅறிஞர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழீழ நீதி, நிர்வாகத்துறையினர் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

## தேசவிரோதிகளால் பொதுமகன் ஒருவர் கைது

[திருமலை]

திருமலை மாவட்டம் ஈச்சிலம்பற்றைப் பகுதியில் உள்ள கறுக்காய் முனையில் ஈ. என். டி. எல். எவ். தேசத்துரோக கும்பலினால் கடந்த 11-ம் திகதி குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட ஈச்சிலம்பற்றையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான நாதன் பவாணன் என்பவர் தேசத் துரோகக் கும்பலால் சிறிலங்கா இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

## வவுனியா பகுதியில் உற்பத்திச்சாலை திறப்பு

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரால் உற்பத்திச் சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ...

...கீகு முகமாக கொந்தக்காரன் குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பண்டாரவன்னியன் இனிப்பு, ரொபி, பிஸ்கட் உற்பத்திச் சாலையில் முதல் கட்...

## 'றுகுணு' வருவதில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

றுகுணு கப்பல் வடபகுதி வந்துசேருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 13ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்பட்ட இக் கப்பல் இன்னமும் இங்கு வந்துசேரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கப்பலில் 2,500பீப்பா மண்ணெண்ணெய் எடுத்து வரப்படுகிறது. (தி)

## இளம்குடும்பஸ்தர் கைது

(திருமலை)

திருமலை மாவட்டம் சேனையூர் கிரவல்குழியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரை கட்டைபறிச்சான் சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

கடந்த 12 ஆம் திகதி இரவு 7 மணியளவில் கட்டைபறிச்சான் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கதிர்காமத்தம்பி சண்முகராஜா [வயது 24] என்பவர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

க.பொ.த [உ/த] ஆகஸ்ட் 1993ஆம் ஆண்டு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆணையாளரினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அதிபர்கள் தங்கள் கோட்டக் கல்விப் பணிமனைகளிலிருந்து சேகரித்து விநியோகிக்கும் வண்ணம் வேண்டப் படுகின்றனர். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் ...

# இளைஞர் பலி; 15 பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையின் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் மற்றும் இரு புக்காரா விமானங்கள் இணைந்து மக்கள் குடியிருப்புகள் மீது அகோர குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. கண்மூடித்தனமான இத் தாக்குதல்களால் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதுடன் 15 பேர் படுகாயமடைந்தனர். பத்திற்கு மேற்பட்ட கடைகள் பலத்த சேதமடைந்தன.

நேற்று நண்பகல் ஒரு மணியளவில் பூநகரி ஆலங்கேணி பிரதேசத்தை வட்டமிட்ட இரண்டு குண்டுவீச்சுவிமானங்கள் அப்பகுதியில்குண்டுவீச்சுத் தாக்குதல்களைமேற்கொண்ட பின் திரும்பிச் சென்றன.

தொடர்ந்து 1 45 மணியளவில் கிளிநொச்சிகரடிப்போக்கு பகுதியை வட்டமிட்ட இரு குண்டு வீச்சு விமானங்களும், இரு புக்காரா விமானங்களும் தொடர்ச்சியாக குண்டுவீச்சுகளை மேற்கொண்டன.

இத் தாக்குதல்களினால் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மூதாட்டி உட்பட பதினொரு பேர் படுகாயமடைந்தனர். அத்துடன் பத்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்கள் பலத்த சேதமடைந்துள்ளன. மேற்படி குண்டு வீச்சுக்களுக்குஇலக்காகி கிளிநொச்சி 5 ஆம் வாய்க்காலைச்சேர்ந்த செட்டி என அழைக்கப்படும் பொன்னையா (வயது 19) என்ற ஒரு பிள்ளையின் தந்தை ஸ்தலத்தில் பலியானார். மேலும் கிளிநொச்சியைச் சேர்ந்த திலகராஜா (25) ஜெயந்திநகர், காந்தன் (20) கரடிப்போக்கு, கதிர் வேலாயுதம் (55) பரந்தன், கிருஷ்ணா (41) பாரதிபுரம், சுந்தரம் (61) திருநகர், ரங்கசாமி (41) 3ஆம் வாய்க்கால், சிதம்பரநாதன் (18, கரடிப்போக்கு, இராமசாமி (50) ஐயப்பன் வீதி, கண்ணன் (20) கரடிப்போக்குச் சந்தி, அருளானந்தம் (47); உருத்திரபுரம், மற்றும் மூதாட்டியான 1 ஆம் வாய்க்காலைச் சேர்ந்த அன்னமமா ஆகியோர் காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காகயாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். தொடர்ந்து விமானங்கள் சென் திரேசா மகளிர் வித்தியாலயமீது தாக்குதலை நடாத்தின. இதன்போது கட்டட வளவிற்குள் வீழ்ந்த குண்டு வெடிக்காததினால ஆயிரம் மாணவர்கள் மயிரிழையில்

(03 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரின் பலபகுதியிலும் நள்ளிரவு ஷெல் தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவத்தால் பல முகாம்களிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். நகரில் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையில் விழ்ந்து வெடித்துள்ளன. பொதுமக்கள் செறிவாக வாழும் இப் பகுதியில் அடுத்தடுத்து ஏவப்பட்ட எறிகணைகள் பேரிரைச்சலுடன் விழுந்து வெடித்துச்

( 4 ஆம் பககம் பார்க்க )

## வவுனியா பகுதியில் உற்பத்திச்சாலை திறப்பு

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரால் உற்பத்திச் சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 15ஆம் திகதி பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கு முகமாக கொந்தக்காரன் குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பண்டாரவன்னியன் இனிப்பு, ரொபி, பிஸ்கட் உற்பத்திச் சாலையில் முதல் கட்டமாக 10 பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மாவீரர்களுக்கு இன்று மக்கள் இறுதி அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

நேற்று அதிகாலை பண்ணை -மண்டைதீவுப் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ காவலரண் மீது விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவடைந்த லெப். கோபாலின் உருவப்படபேழை இன்று மாலை 3 30 மணிவரை அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பி ப 4 00மணி தொடக்கம் 5 00 மணிவரை சாவகச்சேரி பேருந்துநிலையத்தில் அமைக்கப்பட்ட மேடையில்மக்கள் அஞ்சலிக்காகவைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்ச்சி

(03 ஆம் பககம் பார்க்க)

ப்பிவைக்கப் பட்டுள்ளன.பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அதிபர்கள் தங்கள் கோட்டக் கல்விப் பணிமனைகளிலிருந்து சேகரித்து விநியோகிக்கும் வண்ணம் வேண்டப் படுகின்றனர். தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் இடப்பட்டுள்ளன.

## கடைகள் திறந்திருக்கும்

[வடமராட்சி]

யாழ். மாவட்ட வர்த்தக நிலையங்கள் இன்றும் நாளையும் திறந்திருக்கும். நேற்று ஆடிப் பிறப்பையும், எதிர் வரும் திங்கட்கிழமை ஆடி அமாவாசையையும் ஒட்டி வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதற்கு பதிலாக சனி, ஞாயிறு தினங்கள் திறந்திருக்கும். [யோ]

# மண்டைதீவு காவலரண்மீது புலிகள் திடீர் தாக்குதல்

## இரண்டு புலிகள் வீரச்சாவு

[நமதுநிருபர்]

யாழ். பண்ணை சிறிலங்கா இராணுவக் காவலரண் ஒன்றின்மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர்.

யாழ். மண்டைதீவு பண்ணை வீதியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர். சுமார் பத்துநிமிடங்கள் வரை நடைபெற்ற இத் தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை. விடுதலைப் புலிகள தரபபில் இருபோராளிகள் வீரச்சாவடைந்தனர்.

இத் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் மண்டைதீவு, மான்தீவு, மற்றும் அராலி பகுதி இராணுவக் காவலரண்களிலிருந்து அகோர எறிகணைத் தாக்குதல்களையும் தொடர்ச்சியான கலிபர் தாக்குதல்களையும் நடாத்தினர். இத் தாக்குதல் சுமார் ஒரு மணிநேரம் நீடித்தது தெரிந்ததே.

இத் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். வீரச்சாவடைந்த லெப்டினன்ட் புனிதன் [கனகசபை செங்குட்டுவன் - ஐந்து சந்தி யாழ்ப்பாணம்] லெப்டினன்ட் கோபால் [கந்தையா கோபாலன் - சங்கத்தானை சாவகச்சேரி] ஆகிய இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.



லெப். புனிதன



லெப். கோபால்

# புத்தளத்தில் புலிகள் துணிகர அதிரடி 5 பொலிசார் பலி; பலர் படுகாயம்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் இலவன்குள அச்சமுனை என்னும் இடத்தில் இருந்த இராணுவபொலிஸ்காவல்நிலையம் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் சுற்றிவளைத்து அதிரடித் தாக்குதல் நடாத்தியதில் ஐந்து பொலிசார் பலியாகினர். ஏழுபேர் காயமடைந்தனர்.

இவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. ஐந்து நிமிட அதிரடித் தாக்குதலின் பின் பொலிஸ் - இராணுவ காவல்நிலையம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ் வெற்றிகரத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில்சேதம்எதுவும்இல்லை

மேற்படி பகுதியில் இரு வீட்டிலும், இரு காவலரண்களிலும் இருந்த 15க்கு மேற்பட்ட படையினர் மீது நேற்று முன் தினம் பிற்பகல் 4 மணியளவில் இத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத் தாக்குதலின்போது 7 படையினர் காயமடைந்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை இத் தாக்குதலைத் தொடர்ந்து புத்தளம் பகுதிக்கு இஸ்லாமிய கலாசார இராஜாங்க அமைச்சர் அஸ்வர் விஜயம் செய்துள்ளார். அங்கு சென்ற அவர் தாக்குதல் நடைபெற்ற இடத்தையும் பார்வையிட்டார்.

## படகு உரிமையாளர் கலந்துரையாடல்

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று மு.ப. 10.00மணிக்கு கிளாலிப் படகுத்துறைக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(புத்தளம்)

புத்தளம் மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவ-பொலில் கூட்டுக்காவல் நிலையம்மீதுவிடுதலைப்புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதலின்போது பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| ★ ரி56-2ரக துப்பாக்கி | — 01 |
| ★ ரி56-1ரக துப்பாக்கிகள் | — 10 |
| ★ ரி56 ரக ரவைக்கூடுகள் | — 41 |
| ★ ஏ. கே. கோல்சர் | — 10 |
| ★ தொலைத் தொடர்பு சாதனம் | — 01 |
| ★ கெல்மெற் | — 08 |
| ★ நடுத்தர ரவைகள் | — 945 |
| ★ ஏ. கே. எல். எம். ஜி கோல்சர் | — 03 |
| ★ தண்ணீர் கான் | — 02 |
| ★ தண்ணீர் கான் கோல்சர் | — 05 |
| ★ கிற்பாக் | — 03 |
| ★ மில்ரி பெலிற் | — 04 |
| ★ தொலை தொடர்பு சாதன கோல்சர் | — 03 |
| ★ சப்பாத்து (சோடி) | — 15 |
| ★ சப்பாத்து (பொலிஸ்) (சோடி) | — 03 |
| ★ சாப்பாட்டு பெட்டி | — 02 |
| ★ மழைக் கவசம் | — 02 |
| ★ விசில் | — 05 |
| ★ பொலிஸ்சீருடை (சோடி) | — 06 |

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிதாகச் செய்யப்பட்ட ஒற்றை மாட்டுவண்டில் (A-30 ரயர்கள் பொருத்தப்பட்டது) விற்பனைக்குண்டு. தொடர்பு: தருமு தேங்காய்க் கடை, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (சந்தை முன்பாக) (5395)

### சமூகக்கல்வி

ஆண்டு 10, 11 சமூகக்கல்வி மீட்டல் வகுப்பு நடைபெறுகின்றது. படவேலைப் பயிற்சியும் நடைபெறும். ஆசிரியர் M.இக்னேசியஸ் B A (Hons), சபறொக் அக்கடமி, யாழ், கண்டுக்குளி. (5399)

### புலமைப்பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் மாதிரி வினாத்தாள் 18-07-93 ஞாயிறு வெளியிடப்படும் விடையளித்து சந்தால் திருத்திக் கொடுக்கப்படும். பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5372)

### பொதுஅறிவுப்போட்டி (கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் நடாத்தவிருக்கும் மாபெரும் பொது அறிவுப் போட்டி இவ்வாண்டு செப்ரெம்பர் மாதத்தில் இடம் பெறும். (24)

### உரம் விநியோகம் (தொல்புரம்)


யாழ் மாவட்ட விவசாயிகளுக்குக் கமநலச்சேவை நிலையங்களினூடாக 'அமோனியா உரம்' வழங்கப்படவுள்ளது.

மேறபடி அமோனியா உரம் அண்மையில் கொழும்பிலிருந்து கப்பல் மூலமாக யாழ் மாவட்ட கமநலச்சேவை நிலையத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது (41)

### குளங்கள் புனரமைப்பு (தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் குளங்கள் புனரமைப்புவேலைத் திட்டத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரின் உதவியோடு கிராமிய உரபத்திக்குழுக்களும் பொது

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 06-08-1974

இறப்பு: 16-07-1991

### வீரவேங்கை குமரப்பா

[பாலசுப்பிரமணியம் சிவபாலன்]

(பலாலியில் பிறந்து பன்னாலையில் வளர்ந்து ஆனையிறவில் வீரச்சாவு)

கண்ணில் தெரியுதே உன்முகம்
கனவாய் போனதா உன் நியம்
எண்ணில் அடங்கிடா எம் துயர்
ஏங்கும் மனது உன் நினைவினில்
மண்ணில் பிறந்தவர்களுக்கு மரணம் நியதியே
மாவீரர் உம்வழி தொடர்வதே எம் பணி

உன்பிரிவால் துயருறும்
அம்மா, தம்பி, தங்கை, அண்ணன், அண்ணி குடும்பத்தினர்

பன்னாலை, தெல்லிப்பழை. (5056)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 01-05-1974

வீரச்சாவு 10-07-1991

### 2-ம் லெப். தபேசா

(மஞ்சுளா அப்பையா)

தபேசா உன் ஆத்மாசாந்தியடைய ஞானவைரவரை வேண்டுகின்றோம். இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய வேங்கைகளுக்கும் எமது அஞ்சலிகள். 17-07-93 இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் இந்நிகழ்வில் சகல போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாசமுள்ள
அப்பா, அம்மா
சகோதர சகோதரிகள்.

63/3 கொன்டலடி லேன், நல்லூர், (5393)

## அச்சுவேலி முதலிடம்

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தில் உள்ள கொத்தணிப் பாடசாலைகள் மட்டத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர்போட்டிகளில் அச்சுவேலி கொத்தணி முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (42)

## 31-ம்நாள் நினைவு அஞ்சலி


எமது ஆசிரியர் கலாசாலை ஆசிரிய மாணவி சி. கலைவாணியின் தாயார் திருமதி ம. சின்னையா 19-06-93இல் அகால மரணமானார் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!

விஞ்ஞான ஆசிரிய மாணவர்கள்
1-ம் வருடம்
பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.

(5394)

## 7-ம் ஆண்டு நிறைவு நாள்



| தாயின் மடியில் | தாயக மீட்பில் |
|---|---|
| 08 — 09 — 1962 | 17 — 07 — 1986 |

### லெப்டினன்ட் ராஜ்குமார்

(சூ. ஆசீர்வாதம் [ஜெகா])

புன்னகை பூத்த முகத்தினன்
புயலாய் எழுந்த புலியிவன்
தன்னையே மண்ணிற்காய் தந்தவன்
தமிழீழமே தாகமாய் கொண்டவன்

முந்தைய தமிழீழ ஆட்சியை
மீட்கவே போர்க்களம் சென்றவன்
சொந்தமண் காத்திட "ராஜ்குமார்"
அந்த மண்ணிற்கே விதையானவன்
ஏங்கிய விழிகளில் நீரைச்
சொரிகின்றோம் எம் உடன்பிறப்பே – நீ
தாங்கிய கனவினைச் சுமந்து
வாழ்கின்றோம் இம் மண்ணிலே மைந்தனே!

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

மணல் குடியிருப்பு, முல்லைத்தீவு.

[5296]

## நினைவுகூருகின்றோம்...

### 1993-07-17

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு - கொத்தியாவலையில் சிறிலங்கா காவல்துறையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். பயஸ்** (அந்தோனிப்பிள்ளை ஜெஸ்லி - புதூர் - மட்டு)

1986ஆம் ஆண்டு முல்லைத்தீவு - தண்டுவான் பகுதியில் பேருந்து ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்.

மன்னார் - பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 5 தமிழ் இளைஞர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - தெல்லிப்பழையில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**பதுமன்** (குயின்ரன் குருஸ் - பெரியபண்டிவிரிச்சான், இல 97, மடுக்கோவில் - மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**வரதன்** (சின்னத்தம்பி சச்சிதானந்தம் - மாமுனை, செம்பியன்பற்று - யாழ்.)

1989ஆம் ஆண்டு சாவகச்சேரி - முகமாலைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**பவுண்/நிரு** (சிவப்பிரகாசம் வைகுந்தவாசன் - புலோப்பளை மேற்கு - பளை)

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச் சமரின்போது வீரச்சாவெய்திய-

**உதயன்** (கந்தசாமி உதயகுமார் - பங்கிலிட்டி, குப்பிளான், ஏழாலை - யாழ்.)

சமூகவிரோதிகளால் அம்பனைச் சந்தியில் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான நில அளவையாளர்.

**ஆ. மகாலிங்கம்** (மணிமகால், தில்லைகலட்டி, விழிசிட்டி - அம்பனை)

1990ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய -

**லெப். நந்தன்** (வீரகத்தி இராஜேந்திரம் - நெடுங்கேணி - மணலாறு)

**மிதுலன்** (மாணிக்கம் சிறிகரன் - அளம்பில் - மணலாறு)

**கபில்** [சுப்பிரமணியம் முருகேந்திரன் - உடையார்கட்டு- முல்லைத்தீவு]

**ஜாசீர்** (சிவக்கொழுந்து கிரிசாந்தன் - சமணங்குளம், ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**குணம்** (இராஜேந்திரம் பாஸ்கரன் - கூழாமுறிப்பு, ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**சாள்ஸ்** ( ———— )

மட்டு நகரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் தொலைத்தொடர்பு நிலையத்திலிருந்து கருகிய நிலையில்சடலங்களாக மீட்கப்பட்ட 9 தமிழர்கள்.

திருமலை - தம்பலகமம் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

வவுனியா - செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டு கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவு சிறிலங்கா முகாம் தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க.வெ நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய-

**நாதன்** (சின்னத்தம்பி யோகராசா - புதுநகர், மல்வத்தை - அம்பாறை)

**குழந்தை** (செல்வராஜா - இராஜகோபால் - பன்குடாவெளி - மட்டு)

**2-ம் லெப். ஜோண்** (இராஜேந்திரம் உதயகுமார் - 2-ம் வாய்க்கால், பெரியவெளி- திருமலை)

**சுதா** (அர்ச்சுன் மகேந்திரன் - கண்டி வீதி, விளாங்குளம் - திருமலை)

உரபத்திக்ஃமுக்களும் பொது மக்ஃளும் சேர்ந்து கச்சாய் கடறகரைப்பகுதியில் ஒரு குள த்தினையும் கச்சாய் அம்மன் கோயிலுக்கு அண்மையில் ஒரு குளத்தினையும் புனரமைத் துள்ளனர். (86)

### கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சாவகச்சேரி பிரிவி னரின் தைத்த உடைகளின் கண்காடசியும் விற்பனையும் டிறிபேக் கல்லூரி மண்டபத் தில் நடைபெறுகின்றது.

### வலிவடக்கு செல்வார்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ் வதிவிடப பிரதி நிதி இம்மாத இறுதிககுள் வலி-வடக்கு பகுதிககு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள தாக தெரியவருகிறது.

இந்த விஜயத்தின்போது பலாலி இராணுவ முகாமில் தடுத்துவைககபபட்டவர்களை யும் இராணுவ நடவடிக்கை யின்போது வலி-வடக்குப் பகு தியில் சிக்கிய பொது மக்களை யும் இவர் நேரில் சென்று சந் திப்பார் என எதிர்பாரககப் படுகிறது.


ஜோ எகட்டனின்
ஜெசித்தாராவின்

விரதச் சாப்பாடு
ரூபா 25/- மட்டும்

மற்றும்
இறைச்சிச் சாப்பாடு 30/-
மீன் ,, 30/-

மற்றும் உணவு வகை களுக்கு எம்மை நாடுங்கள்

ஜெசித்தாரா.
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை, சுண்டுக்குளி

[சி-7019]




# மேஜர் கோபு / ரதீஸ்

## (பத்மநாதன் கோபுநாதன்)

தேவன் குறிச்சி, சமரபாகு, உடுப்பிட்டி.

எம் மண்ணில்: 04-04-1970

எம் நெஞ்சங்களில்: 17-07-1991

ஆனையிறவு - கட்டைக்காடு சமர்க்களத்தில் வீரச்சாவெய்திய மேஜர் கோபு / ரதீசின் இரண்டாம் ஆண்டு நினைவுதின

# வீர வணக்கக் கூட்டம்

**காலம்: 17-7-1993 சனிக்கிழமை (இன்று) மாலை 5.00 மணி**

**இடம்: மேஜர் கோபு அறிவகம் சனசமூகநிலைய முன்றல்**

தலைமை: நிலையத் தலைவர்

## நிகழ்வுகள்

1. மௌன அஞ்சலி. 2 ஈகைச் சுடர் ஏற்றல்
3. "மேஜர் கோபு அறிவகம் சனசமூக நிலையம்" பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்தல்
4. மேஜர் கோபுவின் நிழற்படம் திரை நீக்கமும் - வணக்கமும்.
5. மேஜர் கோபுவின் முழு அளவிலான உருவப்படம் (கட் அவுட்) திரைநீக்கம் செய்தல்.
6. மேஜர் கோபு ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர்களின் பேச்சு.
7. பேச்சுப் போட்டிகளில் தேர்ச்சியானோருக்கான பரிசில் வழங்கல்
8. தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் நினைவுரை வழங்குவார்கள்.
9. வில்லிசையும் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றனர்-

மேஜர் கோபு அறிவகம் சனசமூக நிலையத்தினர்

சமரபாகு
உடுப்பிட்டி.

[5375]

**சுதா** (அர்ச்சுன் மகேந்திரன் - கண்டி வீதி, விளாங்குளம் - திருமலை)

**கீர்த்தி** (சிவகுரு ரவிச்சந்திரன் - 6-ம் குடியிருப்பு- திருமலை)

**யாழன்** (செல்லையா ரவி - இலுப்பைக்குளம் - வவுனியா)

**2-ம லெப். பாரதி** (சின்னத்தமபி நந்தகுமார் - 154-ம் கட்டை, முறிகண்டி-கிளிநொச்சி)

**அறிவொளி** கணேஸ் சுபாஸ்கரன் - இரத்தினபுரம்- கிளிநொச்சி)

**லெப். ரவியப்பா** (சுப்பிரமணியம் உருத்திரன் - அரிப்பு வீதி சிலாவத்துறை - மன்னார்)

**பாலச்சந்திரன்** (பியதாச ஜேசுராசன் - மடுவீதி-மன்னார்)

**மேஜர் கோபு/ரதீஸ்** (பத்மநாதன் கோபுநாதன் - இலக்க ணவத்தை, உடுப்பிட்டி - யாழ்)

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்-

**மேஜர் நகுலேஸ்வரன்/நகுலேஸ் மாமா** (சிங்காரவடிவேல் தவககுமார் - வல்வெட்டித்துறை)

**கப்டன் அங்கதன்** (ஜெயதிலகா நிசாந்தன் - புளியந் தோட்டம், சுன்னாகம் -யாழ்)

**2ம் லெப். செல்லக்குட்டி** (வீரகத்தி ரஞச்சந்திரன்- நெலலியடி, கரவெட்டி - யாழ்)

**2-ம் லெப். லக்ஷ்மன்** (கிருஷ்ணன் இராமச்சநதிரன் - தெணமூலை - அச்சுவேலி)

**இராமன்** (சக்திவேல் சிறிபாலகிருஷ்ணன்- தீருவில் ஒழுங்கை - வல்வெட்டித்துறை)

**ரமேஸ்** (சின்னத்துரை சபேசன - கொற்றாவலை, அளவெட்டி வடக்கு - யாழ்)

**நித்தியானந்தன்** (சிவசிதம்பரம் சிவகுமார் - சுன்னாகம் மேற்கு - யாழ்)

**அலெக்ஸ்** (அழகு சத்தியசீலன் - 53, கடற்கரை வீதி, குருநகர் - யாழ்)

**செங்கண்ணன்** [இராசரத்தினம் ரகுநாதன- கலிகைச் சந்தி துன்னாலை, கரவெட்டி-யாழ்]

**சிவபாலன்** (சின்னத்தம்பி ஜெயராஜ்- விக்கினேஸ்வராவீதி, சங்கானை - யாழ்)

**சுபைர்** [கந்தசாமி இராஜேந்திரம் - அரியாலை கிழக்கு - யாழ்]

**புஸ்பன்** [பிரகாசம் நோயல் தோமஸ்- நெடுந்தீவு மத்தி - யாழ்]

**பரணி** (முத்துவேல் காந்தலிங்கம் - வேலணை கிழக்கு - யாழ்]

மணலாற்றில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில எமைப்பிரிந்த-

**கோபு** [வெற்றிவேல் வசந்தன் - சிவன்கோயிலடி வீதி, பண்ணக்கட்டை-பருத்தித்துறை]

யாழ் - அடைக்கலமாதா கோயிலடியில் போராளி கள் வைத்தியமனையில் பெற்றோமாக்ஸ் வெடித்ததில் எமைப்பிரிந்த-

**கோடீஸ்வரன்** [அமிர்தநாதன் பாலேந்திரா - 185, கஸ் தூரியார் வீதி, யாழ்]

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-7021)

சிந்தனைக்கு

அவமதிப்பிற்கு ஆளாகத் தன்னை அனுமதிப்பவன் அவமதிப்பிற்கு அருகதையுடையவனே.

- பியேர் கொர்னேய்ல்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-07-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05

## சுதந்திரக்கட்சியின் அவல நிலை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்காவை கட்சியின் தலைவரான சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சியில்இருந்து இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளார். கட்சித் தலைவிக்குரிய அதிகாரங்களை கொண்டு கட்சியின் ஒழுங்கு கட்டுப்பாட்டை மீறியதினாலும், அதன் எதிர்கால வளர்ச்சிக்கு குந்தகமாக செயற்பட்டதினாலும் இவ்இடைநிறுத்தம் கொண்டு வரப்பட்டதாக சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்.

திரு.அனுரா பண்டாரநாயக்காவின் வெளியேற்றமானது நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தொன்றுதான். இவ்வெளியேற்றத்திற்கு கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து மோதலா அன்றி பண்டாரநாயக்கா குடும்பத்திற்குள் ஏற்பட்ட தாய் - மகள் மகன் ஆகியோருக்கு இடையிலான குடும்பத் தகராறா காரணம் என்றால் அரசியல் வட்டாரங்களில் இருந்து குடும்பத் தகராறே முக்கிய காரணமெனப் பதில் கிடைக்கும் நிலையே உள்ளது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அரசியல் வாரிசாக சந்திரிகா குமாரணதுங்காவை உருவாக்க முனைந்தமையும், அனுரா பண்டாரநாயக்கா அதனை எதிர்த்தமையுமே அடிப்படை முரண்பாடு ஆகும். இம்முரண்பாட்டின் காரணமாகத் தாயை மாத்திரமல்ல தமக்கையார் சந்திரிகா குமாரணதுங்காவையுமே அனுரா தீவிரமாக எதிர்த்தார். மாகாண சபைத் தேர்தலில் சந்திரிகாவின் வெற்றியை ''பாலிகா வித்தியாலயத்தில் பென் ஜோன்சன் ஓடிப் பெற்ற வெற்றியைப் போன்றது'' என அனுரா கிண்டல் அடித்ததிலிருந்தே அவர்களுக்கிடையிலான முரண்பாட்டையும், மோதலையும் புரிந்து கொள்ளலாம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்து பதினைந்து வருடகாலமாக எதிர்க்கட்சியாக இருந்து வருகின்றமை அதன் உறுப்பினர்களுக்கு சலிப்பூட்டுவதாகவே உள்ளது. சிறிலங்காவின் 'சுதந்திர அரசியல் வரலாற்றில்' இவ்வளவு நீண்டகாலம் பிரதான கட்சிகள் எதுவும் எதிர்க்கட்சியாக இருக்கவில்லை. பெரும்பாலும் ஐந்து, ஆறு வருடங்களில் ஆட்சி மாற்றங்கள் இடம் பெற்றே வந்தன. ஆனால் இம்முறை 15 வருடங்களாகியும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும்

## இங்கு வைப்பிலிடும் பணம் தெற்கில் கடனுதவியாகிறது

### மக்கள் வங்கிக் கிளை திறப்பில் துணைவேந்தர்

''இங்கு செயற்படும் வங்கிகள் பெற்றுக் கொள்ளும் வைப்புக்களின் மூலம் பெறப்படும் பணத்தைக் கொண்டு தெற்கில் வாழும் சிங்கள மக்களிற்கு அதிக கடன்கள் வழங்கப்படுகின்றன. இந்நிலைமைகளை மாற்ற அனைத்து வங்கி உத்தியோகஸ்தர்களும் முன்வர வேண்டும்''

இவ்வாறு கடந்த புதன் கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் மக்கள்வங்கியின் நவீன சந்தைக் கிளையைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அ. துரைராஜா தெரிவித்தார்.

மேற்படி வங்கிக் கிளையின் முகாமையாளர் அ. சிற்சபேசன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் யாழ்.மாவட்ட பதில்அரசஅதிபர் திருமதி ப. திலகநாயகம், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு பரமேஸ்வரன், மக்கள் வங்கிப் பிரதேச முகாமையாளர் திரு. அருளானந்தம் மற்றும் பலரும் கருத்துரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய துணைவேந்தர், இவ்வாறு நாம் இங்கு வைப்பிலிடும் பணம் எமக்கு கடனுதவிகளாகக் கிடைக்காவிடின் எமது பணம் எமக்குப் பயன் தரும் வகையிலான வழிமுறைகளை நாம் சிந்திக்க வேண்டிய, தெரிவு செய்ய வேண்டிய நிலை வரும் என்று குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள வங்கி உத்தியோகஸ்தர்களிடம் இவ்விடயத்தை எடுத்துக் கூறி எமது மக்களிற்கு அதிக கடன் பெற வசதி செய்து கொடுக்க வேண்டுமெனவும் வங்கி முகாமையாளர்களை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்

இன்று பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்படுகின்ற இந்தவங்கிக் கிளை பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களிற்கு அரும்பணிகளை ஆற்றவேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார். (பா)

## அதிர்ஷ்டசாலியிடமிருந்து பாதுகாப்பு நிதி அறவீடு

மாஜன சம்பத்த சீட்டிழுப்பில் முதல் பரிசு பெற்றவர்களிடம் இருந்து பெருந்தொகையான பணம் பாதுகாப்புச் செலவுக்கு அறவிடப்பட்டுள்ளது.

மாஜன சம்பத்த சீட்டிழுப்பில் ஒருவருக்கு முதல் பரிசாக 2,20,06,855 ரூபா 50 சதம் கிடைக்கப்பெற்றது. இதில் பாதுகாப்பு நிதிக்காக ரூபா 50,000 -ம் யுத்த நடவடிக்கையினால் அங்கவீனம் அடைவோர் நலன்களை பாதுகாப்பதற்காக 60,000 ரூபாவும், பாதுகாப்பு வரிக்காக 10,000 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது என தெரிய வருகின்றது.

## ஆயுர்வேத வைத்தியசேவை

[வடமராட்சி]

சற்கோட்டை,கற்கோவளம் கிராமங்களில் வாரத்தில் இரண்டு நாட்கள் ஆயுர்வேத வைத்திய சேவை நடைபெற கொழும்பு தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது.

மேற்குறித்த வைத்திய சாலைகளுக்கென வைத்திய அதிகாரியும், மருந்துக்கலவையாளரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வைத்தியசாலைகள் முன்னர் வாரத்தில் ஒருநாள் மட்டுமே செயற்பட்டு வந்தன. நோயாளர்களின் பெருக்கத்தைத் தொடர்ந்து புலோலி பிரதேச சபைச் செயலாளர் திரு. செவ்வந்திநாதர் எடுத்துக் கொண்ட முயற்சியினால் மேலும் ஒரு தினம் அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சற்கோட்டை வைத்திய நிலையம் திங்கள், வியாழன் தினங்களிலும், கற்கோவளம் வைத்திய நிலையம் செவ்வாய் வெள்ளி தினங்களிலும் செயற்படுமெனவும் புலோலி பிரதேச சபையில் உள்ள வைத்திய நிலையம் தொடர்ந்தும் இயங்குமெனவும் புலோலி பிரதேசசபை ஆயுர்வேத வைத்திய அதிகாரி திரு வி. வேதநாதன் தெரிவித்தார். (யோ)

## பருத்தித்துறை கடற்பரப்பில் 2 மீனவரைக் காணவில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் தொழிலுக்குச்சென்ற 2 மீனவர்களைக் காணவில்லை.

இதே வேளை நேற்றுக் காலை 8 மணியளவில் இக் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படையினர் பொலி

## அனுராவை தேசிய அரசில் இணைக்க முயற்சி

[கொழும்பு]

ஐக்கிய தேசியக்கட்சி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனுரா பிரிவு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் இணைந்த 'தேசிய அரசு' ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனநாயக தேசிய முன்னணிக்கும் இடையில் இணைப்புக் குறித்த பேச்சுவார்த்தைகள் உச்சகட்டத்தை அடைந்திருக்கும் இவ்வேளையில்,சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தேசிய அமைப்பாளர் அனுராபண்டாரநாயக்காவையும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச்.எம். அஸ்ரப்பையும் சேர்த்துக் கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.

கூட்டு அரசில் அனுராபண்டாரநாயக்க ஆதரவு குழுவினர் இணைவார்களா இல்லையா என்பது இதுவரை தெரியவரவில்லை.

## நூல் வெளியீடு

[யாழ்ப்பாணம்]

''நல்லைக் குமரன் மலர்'' என்னும் நூல் நல்லைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ளது.

இந் நூல் நல்லைக்கந்தன் கொடியேற்ற தினமாகிய எதிர்வரும் 24ஆம் திகதி ஆலயத்தில் வைத்து வெளியிடப்படவுள்ளது

மேலும் இவ் வெளியீடு யாழ் மாநகர சபை சார்பாக வெளியிடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சேவைக்கால பயிற்சி

[யாழ்ப்பாணம்]

சங்கீத பாட நெறிக்கான சேவைக்கால பயிற்சிக் கருத்தரங்கு நாளை 18 ஆம் திகதி காலை 8 30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இசை ஆசிரியர்கள் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு சேவைக்கால பயிற்சி ஆலோசகரும் யாழ் மேலதிக அரச அதிபருமாகிய திருமதி திலகநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மூடப்பட்டிருக்கும்

19ஆம் திகதி ஆடி அமாவாசையை முன்னிட்டு ஊர்காவற்றுறை ப.நோ. கூ. சங்க தலைமைக்காரியாலயம் கிளைகள் யாவும் மூடப்பட்டிருக்கும் என பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## சுட்டிலக்கங்கள் வந்தன

[யாழ்ப்பாணம்]

1993-பொது எழுதுனர் சேவை அதி விசேட தரம் சேவை மூப்பு அடிப்படையிலான பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் மற்றும் சுட்டிலக்கம் என்பன யாழ் செயலகத்திற்கு பரீட்சை ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி விபரங்களை பார்வையிடவிரும்பும்பரீட்சார்த்திகள் யாழ். செயலக அலுவலக உத்தியோகத்தர் அல்லது நிர்வாகஉத்தியோகத்தர்களை சந்திக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேற்படி பரீட்சை எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## மீன்பிடி வலை வழங்கப்படும்

(தொல்புரம்)

குடாநாட்டில் இராணுவ வன்முறை நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த மீனவர்களுக்கு கரை வலைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கரைவலைகளை இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கி இருக்கும் மீனவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. ரூபா 15 ஆயிரம் பெறுமதியான கரைவலைகள் கொழும்பில் இருந்து அண்மையில் எடுத்து வரப்பட்டுள்ளன. இவற்றை மீன்பிடியாளர்குடும்பங்களுக்கு வழங்க செஞ்சிலுவைச் சங்கம் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [41]

## சிறிமாவுக்கு எதிராக அனுரா ஆதரவாளர் கோசம்

[கொழும்பு]

அனுரா பண்டாரநாயக்க கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதையடுத்து அவரின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர். ரோஸ் மீட் பிளேஸி

டிற்கு முன்பாக இவ் ஊர்வலம் நடாத்தப்பட்டது.

நேற்று சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் மத்திய குழு உறுப்பினர்களுக்கும் எதிராககோசங்களையும்,பதாகைகளையும் தாங்கியவண்ணம்

## லலித்தின்

புலிகளுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்றும் லலித் அத்துலத்முதலியின் கொலை தொடர்பாக புலன் விசாரணை நடாத்திவந்த ''ஸ்கொட்லண்ட்யார்ட்'' அதிகாரிகள் குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு பேர் அடங்கிய இப் புலன்விசாரணைக் குழுவினரின் அறிக்கையை அரசு வெளியிட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: லலித் அத்துலத்முதலி விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார் என்று நிரூபிக்கமுடியாது என்றும் இக் கொலைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தலைமைத்தளம் அமைந்துள்ள வடபுலத்தைச்சேர்ந்த பல சந்தேகநபர்களுக்கும் அத்துலத்முதலியின் கொலையாளிக்கும் தொடர்புகள் இருந்திருக்கின்றன.

இக்கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் லெபனான் நாட்டில் இருந்து எடுத்துவரப்பட்டது என்றும்,லெபனானுக்கும் புலிகளுக்கும் தொடர்புகள் இருப்பது தெரியவந்தது என்றும் இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கொலைக்குக் காரணம் பிரேமதாசா தான் என்ற குற்றச்சாட்டை மேற்படி விசாரணைக்குழுவினர் நிராகரித்துள்ளனர். இக்குற்றச்சாட்டுக்கு நேர்முகமான சாட்சியங்களோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களோ கிடையாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தமது விசாரணைக்குத் தேவையான பல சாட்சியங்

இருந்து வருகின்றமை அதன் உறுப்பினர்களுக்கு சலிப்பூட்டுவதாகவே உள்ளது. சிறிலங்காவின் 'சுதந்திர அரசியல் வரலாற்றில்' இவ்வளவு நீண்ட காலம் பிரதான கட்சிகள் எதுவும் எதிர்க் கட்சியாக இருக்கவில்லை. பெரும்பாலும் ஐந்து, ஆறு வருடங்களில் ஆட்சி மாற்றங்கள் இடம் பெற்றே வந்தன. ஆனால் இம்முறை 15 வருடங்களாகியும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் வாய்ப்பு ஏற்படாமையானது பலரது நம்பிக்கைகளைச் சிதறடிப்பதாகவே உள்ளது.

இருப்பினும், கடந்த மாகாணசபைத் தேர்தல் ஓரளவு நம்பிக்கை ஊட்டுபவையாக இருந்தன. சுதந்திரக்கட்சி மீண்டும் புத்துயிர்ப்பு பெறலாம் எனக் கருதவும் பட்டது ஆனால், சுதந்திரக்கட்சி தனது உட்கட்சிப் பூசலைத் தீர்க்கத்தவறிவிட்டது. இப்பொழுது சுதந்திரக்கட்சிக்குள் தனியாக சிறிமாவோ - அனுரா பிரச்சனை மட்டுமல்ல, ஹேல உறுமய போன்ற குழுக்களும் உள்ளன. அவையும், கட்சித்தலைமைக்குக் கீழ்படிந்து நடக்கக்கூடியனவாக இல்லை.

சுதந்திரக்கட்சி தமக்குள் நிலவும் பூசல்களையும் மோதல்களையும் நிவர்த்திசெய்து கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய அணுகு முறையை ஊன்றிக் கவனித்தாலே போதுமானதாகும். அதாவது, கடந்த காலத்தில் பல்வேறு காரணங்களினால் வெளியேறியவர்கள், வெளியேற்றப்பட்டவர்களை இன்று மீண்டும் அணைத்துக் கொள்வதில் அக்கட்சி தீவிர அக்கறை காட்டுகின்றது. மாகாண சபைகளில் எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததினால், தன்னை சீரமைப்புச் செய்வதில் ஐ. தே. க. ஈடுபட்டுள்ளது.

ஆனால், மாகாணசபைகள் சிலவற்றில் கிடைத்த வெற்றியைக்கூட சுதந்திரக்கட்சி சாதகமாகப் பயன்படுத்தத் தவறிவிட்டது. தமது பிரகாசமான எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடனும், கட்டுப்பாட்டுடனும் செயற்படவேண்டிய சுதந்திரக் கட்சி உட்கட்சி மோதல்களில் சிக்கிப் போயுள்ளது, கட்சி உடைந்து சின்னாபின்னமாகச் சிதறிப்போய் விடுமோ என அஞ்சப்படும் நிலையே இன்றுஉருவாகியுள்ளது இதற்கு தனியாக சிறிமாவோ அன்றி அனுராவோ காரணமல்ல. இருவருமே கூட்டுப் பொறுப்பு ஏற்கவேண்டும்.

இதேவேளை, சுதந்திரக்கட்சி இந்நெருக்கடியில் இருந்து மீண்டும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமானால், தனியாக உட்கட்சிப் பூசல்களை களைவது மட்டும் போதாது. கட்சிக்கு புதிய கொள்கையும், புதிய அணுகு முறையும் வேண்டும். ஏனெனில் உலகம் மாறிவிட்டது. மக்களும் மாறிவிட்டார்கள். பழைய சிந்தனைகளையும், நினைவுகளையும் மக்கள் ஏற்கத் தயாராகவில்லை. அவர்கள் புதிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையுமே எதிர்பார்க்கின்றார்கள். இது சிறிலங்கா அரசியல் தொடர்பாக மட்டுமல்ல, இனப்பிரச்சினை தொடர்பாகவும் உள்ள நிலை இதுவே. இதற்கு சுதந்திரக்கட்சி தன்னை தயார் படுத்திக் கொள்ளுதலே அதன் எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடியதாகும்.

புலோலி பிரதேச சபைச் ... தார். (யோ)

# பருத்தித்துறை கடற்பரப்பில் 2 மீனவரைக் காணவில்லை

(வடமராட்சி)

பருத்தித்துறை கடற்பரப்பில் தொழிலுக்குச்சென்ற 2 மீனவர்களைக் காணவில்லை. நேற்றுமுன்தினம் மாலை ஆறு மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரும் இன்னமும் திரும்பிவரவில்லை.

முனையில் தங்கிவந்த மாரீசன் கூடலைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ச. ஜேம்ஸ் ராசநாயகம் (வயது 44) என்பவரும், ஆனைக் கோட்டையைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வேலாயுதம் சிவம் (வயது25] ஆகிய குடும்பத்தலைவர்களே காணாமல் போனவர்களாவர்.

இவர்கள் இருவரையும் சிறிலங்கா கடற்படையினர் தாக்கியிருக்கலாமென்றும், பிடித்துச் சென்றிருக்கலாமென்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் குறித்து கடலில் சல்லடை போட்டுத் தேடியபோதிலும் இவர்களை மீட்கவும் முடியவில்லை. தகவலும் தெரியவில்லை. இதேசமயம் கடற்படையினர் இக் கடற்பரப்பில் பலதடவைகள் ரோந்துச் சேவையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுக் காலை 8 மணியளவில் இக் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படையினர் பொலிகண்டி, சற்கோட்டைப் பகுதிகளில் பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். வெற்றிலைக்கேணியிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த படையினர் திக்கத்தில் நிலைகொண்டு நாலாபுறமும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் சற்கோட்டைப் பகுதியில் வலைகள் கடலில் கைவிடப்பட்டன (யோ)

## கிளிநொச்சி

உயிர்தப்பியமை குறிப்பிடத்தக்கது.

மீண்டும் 2.40 மணியளவில் பூநகரி நல்லூர் பகுதிக்கு உலங்குவானூர்தியின் உதவியுடன் வந்த விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. விமானப்படையின் இத் தாக்குதல்களினால் இரு வீடுகள் சேதமடைந்ததுடன் நால்வர்படுகாயமடைந்தனர். இத் தாக்குதலில் பூநகரி நல்லூரைச் சேர்ந்த சுப்பிரமணியம் இலட்சுமி(45), சுப்பிரமணியம் லோகேஸ்வரி (17), க. சிவதர்சன் (15), க குகனேஸ்வரி (10) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்களில் இருவர் நல்லூர் அ. த. க. பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவு. யாத்திரிகர் விடுதியில் சிங்களவர் கடையமைப்பு

[யாழ்ப்பாணம்]

வவுனியா யாத்திரிகர் விடுதியில் அத்துமீறிக் கடைஅமைத்துக் கொண்ட சிங்களவர்கள் அவ்விடத்திலிருந்து விலகிச் செல்ல மறுக்கின்றனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

இராணுவ, பொலிஸ் அதிகாரிகளின் ஊக்குவிப்பில் அத்துமீறி சிங்களவர்களால் இங்கு பத்துக்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

யாத்திரிகர் தங்கும் விடுதிக் காணியில் சமீபத்தில் திடீர் என்று புகுந்த சிங்களவர்களே இக் கடைகளை அமைத்துள்ளனர்.

வவுனியா நகரசபையின் அங்கீகாரமின்றியும், வவுனியா செயலகத்திற்குத் தெரியாமலும் இந்த வெளியூர்ச் சிங்களவர்கள் இக்கடைகளை அமைத்துக் கொண்டுள்ளனர்.

வவுனியாவிலுள்ள பொது ஸ்தாபனங்கள் சிங்களவர்களின் அத்துமீறல் நடவடிக்கையைக் கண்டித்து அரசாங்கத்திற்கு தகவல் அனுப்பியுள்ள போதிலும் இது சம்பந்தமாக அரசாங்கம் எதுவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லையாம்.

வவுனியா பிரதம விகாரை பிக்கு ஒருவரின் அனுசரணையுடனேயே இக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளனஎன்றும், இதற்கு பொலிசாரும், இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்றும் தெரியவருகிறது (தி)

## மாவீரர்களுக்கு

முடிவடைந்ததும் கண்டி வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்,

லெப். புனிதனின் புகழுடல் ஐந்து சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருக்கும். இறுதி அஞ்சலி விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

## போட்டிகள் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு யாழ். மாநகர சபையினால் சைவசமயஅறிவு பண்ணிசை, சமய அறிவுப் போட்டி, சைவ சமயக் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபை வருடாவருடம்மேற்படிபோட்டிகளைத் திறம்பட நடாத்தி பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கி வருவது அறிந்ததே.

# சிறிமாவுக்கு எதிராக அனுரா ஆதரவாளர் கோசம்

[கொழும்பு]

அனுரா பண்டாரநாயக்க கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதையடுத்து அவரின் ஆதரவாளர்கள் எதிர்ப்பு ஊர்வலங்களை நடாத்தியுள்ளனர். றோஸ் மீட் பிளேஸிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வீட்டிற்கு முன்பாக இவ்வூர்வலம் நடாத்தப்பட்டது.

நேற்று சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் மத்திய குழு உறுப்பினர்களுக்கும் எதிராககோசங்களையும், பதாகைகளையும் தாங்கியவண்ணம் நூற்றுக்கணக்கான அனுரா ஆதரவாளர்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

# அனுராவுக்குஎதிராகசிறிமா யுத்தப் பிரகடனம்

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடம் தமக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை மூலம் கட்சிக்குள் ஒரு யுத்தத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க பிரகடனப்படுத்தியுள்ளார் என அக்கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட அதன் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த யுத்தத்திற்கு எதிராக தானும் எந்த நேரத்திலும் யுத்தப் பிரகடனம் செய்ய தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இவ் யுத்தத்தில் பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்கள் தமக்கு ஆதரவாக இருப்பர் என்றும், இதனால் கட்சிக்குள் பிளவு ஏற்படுவதைத் தடுக்கமுடியாதுபோகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ரணைக்குழுவினர் நிராகரித்துள்ளனர். இக்குற்றச்சாட்டுக்கு நேர்முகமான சாட்சியங்களோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களோ கிடையாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தமது விசாரணைக்குத் தேவையான பல சாட்சியங்களை ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி மறைத்து வைத்தது குறித்து இக்கட்சிமீது மேற்படி விசாரணைக்குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

லலித் அத்துலத்முதலியின் மரணம் தொடர்பான விசாரணைகளை மீளாய்வு செய்த குழுவின் தலைவரும் ஸ்கொட்லண்ட்யார்ட் புலனாய்வு பிரிவு அத்தியட்சகருமான அலிக் எட்வேட் தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தார்.

அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட அடுத்த நாள் ஸ்கொட்லண்ட்யார்ட் விசாரணை நடைபெறும் என முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அறிவித்திருந்தார். இந்த விடயம் குறித்து பல பொய்யான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதால் முழுமையான அறிக்கை வெகுசன தொடர்பு சாதனங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என டி. பி. விஜயதுங்க பணித்திருந்தார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**16-07-93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10393

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 27-6524 | 27-4162 | 27-0849 | 27-8999 | 28-1049 |
| 24-7267 | 26-3962 | 26-0512 | 26-2421 | 42-7312 |
| 27-1292 | 28-5294 | 42-3495 | 26-2317 | 27-9756 |

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 26-4885 | 27-6583 | 27-8515 | 24-5069 | 27-7653 |
| 42-9112 | 28-0429 | 40-2780 | 43-3576. | |

## தேவை

அறிவியல், விஞ்ஞான
தமிழாக்க விடயங்களையும்,
வீடியோ திரைப்படத்
தமிழாக்க விடயங்களையும்
ஒப்பிட்டு சரிபார்க்கக்கூடியவர்கள் தேவை

**பல்கலைக்கழக, பாடசாலை கல்வி முடித்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.**

விளம்பர இல. 195,
மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (சி/7025)



## வேலை வாய்ப்பு

### விற்பனைப் பிரதிநிதி

மேற்படி பதவிக்கான விண்ணப்பதாரரிடமிருந்து பின்வரும் தகைமைகளை எதிர்பார்க்கிறோம்.

1. ஆகக்கூடியது 24 வயது
2, கல்வித்தகைமை :
   அ) க. பொ. த. (சா/த) இல் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி.
   ஆ) க. பொ. த. [உ/த] இல் 3 பாடங்களில் சித்தி
3. சுறுசுறுப்பாக செயற்படக்கூடியவராக இருக்க வேண்டும்.

வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

இரு சிபாரிசு செய்யக்கூடியவர்களின் பெயர்களுடன் கூடிய சுய விபரங்களுடன் 23-7-93 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக முகாமையாளர்
ரேஸ்ட்லைன் இன்டர்ரீஸ் [தனி]லிமிட்டெட்
14, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.
[சி-7026]





UNIKCO
COMPUTER
CENTRE

★ BASIC Language
★ PASCAL Language
★ dBASE III PLUS and MS-DOS
★ LOTUS 1-2-3 and MS-DOS
★ WORD PROCESSING (Word Star Rel 5 5) and MS-DOS



## ஊனமுற்றோருக்கு உதவுங்கள்

யாழ். லயன்ஸ் கழக ஆதரவில் நடைபெறும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பங்கு பற்றுவதன் மூலம் ஊனமுற்ற உங்கள் சகோதரருக்கு உதவுங்கள்,

ஊனமுற்றோரினால் மட்டுமே விற்கப்படும் இச்சீட்டு ரூபா 10/= மட்டுமே.

அதிர்ஷ்ட சாலிக்கு கிடைக்கும் பரிசு:
[1.] ரூபா 10,000/ [2].ரூபா5 000/-[3 ] ரூபா 2,500/-
ஆறு ஆறுதல் பரிசில்கள்:
தலா 250/-

செயலாளர்,
யாழ். லயன்ஸ் கழகம்.
(5401)



## அறிவித்தல்

**வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
[மட்டுப்படுத்தப்பட்டது]
1993-06-30ஆம் திகதி முடியவுள்ள
வாக்காளர் இடாப்பு

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 30-06-93ஆம் திகதிவரை பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பட்டியல், யாழ்ப்பாணம், மானிப்பாய்வீதி, கோணாந்தோட்டவீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள தற்காலிக நிவாரணக் கிளைகளில் அங்கத்தவர்களின் பார்வைக்காக (15-07-93—25-07-93ஆம் திகதி வரையான காலப் பகுதியில்) வைக்கப்பட்டுள்ளன. வாக்காளர் பட்டியல் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருந்தால் அவற்றை 26-07-93ஆம் திகதி தொடக்கம் 04-08-93ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் செயலாளர், வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி

செயலாளர்
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(சி-7020)



## 2ஆம் ஆண்டு நினைவாக...

### மேஜர் கோபு - ரதீஸ்

(பத்மநாதன் கோபுநாதன்)
[சமரபாகு, இலக்கணவத்தை, உடுப்பிட்டி]

பிறப்பு: 04-04-1970 வீரச்சாவு: 17-07-1991

கோபு
பெரிதும் பேசிடான் பேச்சளவில் கதைக்கமாட்டான்
கருமை நிறத்தவன் கட்டுள்ள தோற்றத்தான்
முறுவல் ஒன்றுடனே முழுமையாய் அவனை தெரியும்
—ஒன்று
உறுதியாய் உரைத்துவிட்டால் உடனிலே முடித்து
நிற்பான்
இவன்,
விரைந்தவன் களத்தினிடை விடியலுக்கு முந்தி
விட்டான்
இறுதியாய் ஒன்றைச் சொல்வோம் தருமமே வெல்லும்
என்போம்

(சி-7028) —நண்பர்கள்


# சுதந்திரக்கட்சி செயலாளர் வீட்டுக்கு குண்டுவீச்சு

## ஒரு வாகனம் முற்றாக சேதம்

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்க கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டதையடுத்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்காவின் வீட்டிற்கு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இக்குண்டு வீச்சினால் அவரது வீட்டில் நின்ற வாகனமொன்று முற்றாக சேதம் அடைந்துள்ளது.

கட்சியின் மேலும் பல உறுப்பினர்களுக்கு எதிராக வன்முறை நடவடிக்கைகள் தொடரலாம் என அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கட்சி செயலாளர் வீட்டிற்கு கைக்குண்டு வீசப்பட்டது அக்கட்சி வன்முறை அரசியலுக்குள் செல்ல ஆயுதமாவதையே காட்டுகின்றது என கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர் நிமால் சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சி எப்போதும் குண்டுகளில் நம்பிக்கை கொண்ட கட்சியில்லை. சுதந்திரக்கட்சி ஜனநாயகத்திலே நம்பிக்கை கொண்டுள்ளது எனவே குண்டுகளினால் ஜனநாயகத்தை வளர்க்கமுடியாது ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


## சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்

**Saiva Siddhanta Study Circle**

### 4-ம் ஆண்டு நிறைவு விழா

ஜூலை 18 ஞாயிற்றுக்கிழமை
காலை 9-30 - 1-00 வரை

சிறப்பு நிகழ்ச்சிகள்:

| | | |
|---|---|---|
| திருவுந்தியார் | – | இசையுடன் பாடல் |
| திருவுந்தியார் | – | சிறப்புரைகள் |
| சமயத்தூது | – | இசை, உரைச்சித்திரம் |

இடம்: நாவலர் கலாசார மண்டபம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/7027)
V. J. கொன்ஸ்ரன்ரைன்
பொதுச் செயலாளர்


## மரண அறிவித்தல்கள்

சில்லாலை

### அந்தோனிப்பிள்ளை அருளானந்தம்

சில்லாலையை பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் (16-07-93) வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார். இவர் எலிசபேத் (இரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும் அன்ரன் (கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனம்), புஷ்பம் (ஜேர்மனி), பவளம், காலஞ்சென்ற மதுரம், அருமை (கொழும்பு பயனியர் றேடர்ஸ்), பரிமளம் (நீர்கொழும்பு), றஞ்சி (கொழும்பு), பேபி (பண்டத்தரிப்பு பயனியர் றேடர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதி (ஆசிரியை தி. கு. க. மகாவித்தியாலயம் வவுனியா),

## கருத்தரங்கு

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சமாசத்தின் ஒத்திகை வேலுடு வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நாளை பகல் 9.30 மணிக்கு சாளரம் இதழ் கருத்து நிகழ்வு சமாசத் தலைவர் திரு ச. கைலாசநாதன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

## விபரங்களை தரவும்

பொருண்மிய மேம்பாட்டுச் சபையினர் இளங்கன்று நடாத்திடும் பாடசாலைகளையும் அப் பாடசாலைகளால் வழங்கப்படக் கூடிய தொகையினையும் விபரமாகத் தந்துதவுமாறு சகல கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுக் கொள்கின்றனர்.

## பெற்றுக்கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

வீதியில் கண்டெடுக்கப்பட்ட வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தின் முக்கிய சில ஆவணங்கள் அடங்கிய சிறிய பை ஒன்று வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் வந்து இதனை ஆதாரங்காட்டி பெற்றுக்கொள்ளவும்.

(சி-7026)

யாழ்ப்பாணம்.

# UNIKCO COMPUTER CENTRE

★ BASIC Language
★ PASCAL Language
★ dBASE III PLUS and MS-DOS
★ LOTUS 1-2-3 and MS-DOS
★ WORD PROCESSING (Word Star Rel 5 5) and MS-DOS

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

வார இறுதி வகுப்புக்கள் : 18-07 93
வார நாள் வகுப்புக்கள் : 20-07 93

மேலதிக விபரங்கட்கு,
37, CLOCK TOWER ROAD JAFFNA.
[வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்]
(சி-7029)

# அந்தியேட்டி அழைப்பு

ஆசிரியர்

## நாகலிங்கம் இராசையா

மலர்வு: 05-11-1923

உதிர்வு: 18-06-1993

எங்கள் குடும்ப விளக்காக இருந்து எம்மை
சீர்பெற வாழ வழிசமைத்த அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
இறைஞ்சுகிறோம்.

ஆசிரியர் நாகலிங்கம் இராசையா (தியாகி திலீபனின் தந்தை) அவர்களது அந்தியேட்டிக் கிரியைகள் (18-7-93) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் வருகை தந்து அவரது ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
இ. இளங்கோ, இ. நம்பி,
இ. அசோகன்

திலீபன் வீதி,
ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.

(5402)

# மேஜர் கோபு - ரதீஸ்

(பத்மநாதன் கோபுநாதன்)

[சமரபாகு, இலக்கணவத்தை, உடுப்பிட்டி]

பிறப்பு: 04-04-1970

வீரச்சாவு: 17-07-1991

கோபு
பெரிதும் பேசிடான் பேச்சளவில் கதைக்கமாட்டான்
கருமை நிறத்தவன் கட்டுள்ள தோற்றத்தான்
முறுவல் ஒன்றுடனே முழுமையாய் அவனை தெரியும்
—ஒன்று
உறுதியாய் உரைத்துவிட்டால் உடனிலே முடித்து
நிற்பான்
இவன்,
விரைந்தவன் களத்தினிடை விடியலுக்கு முந்தி
விட்டான்
இறுதியாய் ஒன்றைச் சொல்வோம் தருமமே வெல்லும்
என்போம்

(சி-7028)

—நண்பர்கள்

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



## வீரவேங்கை இராமன்

(சத்திவேல் ஸ்ரீபாலகிருஷ்ணன்/பாலுக்குட்டி)

(கட்டைக்காட்டு சமரின்போது வீரச்சாவடைந்தார்)

தாயின் மடியில்: 1972. 03. 17

தமிழ்மண்ணின் வித்தாக: 1991. 07. 17

கட்டைக்காட்டு களமதில் காவியமாகிய எம் செல்வமே
தலைவன் வழியில் வீரமுடன் வீறுநடை போட்டவனே
வல்வையின் வீரமதை எடுத்துக் காட்டியவனே
தூயவனே உன் வழியில் விரைவில் ஈழம் உருவாகும்
பார்த்து மகிழ நீ இல்லையே என இதயம் துடிக்குதே
பிஞ்சிலே முதிர்ச்சி கண்டாய் தமிழ் ஈழமே இறுதி எனக்
கண்டாய்
கானகமெல்லாம் திரிந்து களம் பல கண்டவனே
பாலுக்குட்டி என இனி நாம் யாரை அழைப்பதடா.

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரருக்கு
எமது அஞ்சலிகள்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

ஸ்ரீபவனம்,
திருவில் தெரு,
வல்வெட்டித்துறை.

(5377)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

சில்லாலை

## அந்தோனிப்பிள்ளை அருளானந்தம்

சில்லாலையை பிறப்பிடமாகவும் கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அருளானந்தம் (16-07-93) வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார். இவர் எலிசபேத் (இரத்தினம்) அவர்களின் அன்புக் கணவரும் அன்ரன் (கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனம்), புஷ்பம் (ஜேர்மனி), பவளம், காலஞ்சென்ற மதுரம், அருமை (கொழும்பு பயனியர் றேடர்ஸ்), பரிமளம் (நீர்கொழும்பு), றஞ்சி (கொழும்பு), பேபி (பண்டத்தரிப்பு பயனியர் றேடர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரதி (ஆசிரியை தி. கு. க. மகாவித்தியாலயம் வவுனியா), பற்றிக், அன்ரன் (சிலோன் பிறின்ரேர்ஸ் கொழும்பு), சந்திரா, கரோலினா ஆகியோரின் அன்பு மாமனாரும், சியாமின், கௌசி, நிர்மலன், சர்மிலன், டெரிக், றொட்றிக் பெலின்டா, விறட்றிக், லொறின்டா, பென்றிக், லின்டா, ஜெவின்டா, றஜன், றமேஷ், டினேஸ், சதீஸ், விஜி, றூஜி, றூஜான், றிஜானி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் 17-07-93 சனிக்கிழமை (இன்று) பி.ப. 3 மணிக்கு கட்டுடை இல்லத்திலிருந்து சண்டிலிப்பாய் புனித திரேசம்மாள் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காகக் கொண்டு செல்லப்படும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. யோ. செல்வநாயகம் (பேபி)
மகன்

திருமகால்
கட்டுடை,
மானிப்பாய்.

(5403)

## சுப்பிரமணியம் தபீந்திரன் (ராசன்)

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட தபீந்திரன் 15-7-93 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம், பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் ரவீந்திரன் (ஓமான்), சுமந்திரன் (ஜேர்மனி), சிறிதரன் (கனடா), திருச்சோதி, (ஜெயா) பிரகலாநிதி, (அச்சி) பகீரதன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாக்கியத்தின் மைத்துனரும் கார்த்திகா, தீர்த்திகா, தர்சிகா, சுலிதா, நிஷாந்தன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் சிவராசா, அருந்ததி, நடராசா, சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், கண்மணியின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) சனிக்கிழமை [17-7-93] மு.ப. 10.00மணிக்கு ராசன்மில், உசன், மிருசுவில் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம் பாக்கியம்

[5400]

...றிடும் பாடசாலைகளையும் அப் பாடசாலைகளால் வழங்கப்படக் கூடிய தொகையினையும் விபரமாகத் தந்துதவுமாறு சகல கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுக் கொள்கின்றனர்.

## பெற்றுக்கொள்ளவும்

[யாழ்ப்பாணம்]

வீதியில் கண்டெடுக்கப்பட்ட வடமாகாண புற்றுநோய்ச் சங்கத்தின் முக்கிய சில ஆவணங்கள் அடங்கிய சிறிய பை ஒன்று வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் வந்து இதனை ஆதாரங்காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## அவசர பொதுக் கூட்டம்

யாழ் பல்கலைக் கழக மட்டக்களப்பு - அம்பாறை, திருக்கோணமலை மாவட்ட மாணவர்களுக்கான அவசர பொதுக் கூட்டம் இன்று பி.ப. 4 00 மணிக்கு இராமநாதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில்இம் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும், ஏனைய பீட, ஒன்றியத் தலைவர்களையும் சமூகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## கராத்தே போட்டி

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினரால் நடாத்தப்படும் கராத்தே போட்டிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 31. 07. 93 வரை பிற்போடப்பட்டுள்ளது. விண்ணப்பப் பத்திரங்களை கராத்தே பயிற்றுநர்கள் கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் பெற்று 31.07.93 ற்கு முன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

யாழ்.

சிதறியதால் நித்திரையில் ஆழ்ந்திருந்த மக்கள் பதற்றமடைந்தனர்.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் நீராவியடியைச் சேர்ந்த பொ. ரவீந்திரன் என்பவர் காலில் காயமடைந்தார்.

பெருமாள் கோவிலுக்கு அருகாமையிலும்வேறு பல இடங்களிலும் ஷெல்வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை, மான்தீவு, அராலித்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களிலிருந்து எறிகணைகள் ஏவப்பட்டன. [தி]